**லோறன்ஸ்கூக் தமிழர் விளையாட்டுக்கழகம்**

# 2022ஆம் ஆண்டுக்கான நடைமுறை விதிகள்

**(19.02.2022 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது)**

## 2022ஆம் ஆண்டுக்குரிய கட்டணங்கள்

### அங்கத்தவர் கட்டணம் (Medlemskontingent)

ஒரு அங்கத்தவருக்கான கட்டணம் 50 குரோணர்.

### பயிற்சிக் கட்டணம் (treningsavgiften)

பயிற்சிக் கட்டணமானது கால்பந்து மற்றும் கரப்பந்து குழுக்களில் பங்கேற்போர் மட்டுமே செலுத்த வேண்டும்.

- பயிற்சிக் கட்டணம் குடும்பத்தில் ஒருவருக்கு 700 குரோணர், இருவருக்கு 800 குரோணர், மூன்று பேருக்கு 900 குரோணர், அதிகபட்சம் 1,000 குரோணர்.
- 18 வயதுக்குமேற்பட்ட தனி அங்கத்தவர்களுக்கான கட்டணம் 250 குரோணர்

### தடகள/நீச்சல் போட்டி கட்டணம்

தடகள போட்டிகள் மற்றும் நீச்சல் போட்டிகளில் பங்கேற்போர் 50 குரோணர்கள் செலுத்த வேண்டும். எனினும் பங்கேற்க தவறும் பட்சத்தில் முழுமையான தொகையான 120 குரோணர்கள் செலுத்த வேண்டும்.

## வருடாந்த சந்திப்பு (LTSK årligsamling)

- அங்கத்தவர்களுக்கானது.
- நடப்பாண்டு நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும்.
- எவ்வித கழக செயற்பாடுகளிலும் பங்குபற்றாத லோறன்ஸ்கூக் நகரத்தில் வாழும் அங்கத்தவர்களுக்கு 50 குரோணர்கள் மட்டுமே.

## விளையாட்டுப் பயிற்சி

- அங்கத்தவர்கள் மட்டுமே பங்குபெறலாம்.
- பயிற்சியில் பங்கெடுக்கும் வீரர்களின் வருகை குறைவாக இருக்கும் பட்சத்தில், அணிப்பொறுப்பாளரது சம்மதத்துடன் நண்பர்களை அழைத்து வரலாம்.

### Prøvetid for nye medlemmer:

ஒருவர் கழகத்தின் புதிய அங்கத்தவராக சேரவிரும்பினால், அவருக்கு prøvetid ஆக ஒரு மாதம் கொடுக்கப்படும், Prøvetid காலகட்டத்திற்குள் அவர்கள் விரும்பினால் அங்கத்தவர்களாக சேரலாம்.

## அணிகளைத் தேர்வு செய்தல், விளையாடுதல், வீரர்களைப் பயன்படுத்தல்

**நோக்கம்:**
அனைவரதும் பங்களிப்பில் மகிழ்வும் மனநிறைவும் ஒழுக்கமும் முதலிடமாக, வெற்றிக்கு வழிவகுத்தல்

**அணிகளைத் தேர்வுசெய்தல்,**

- அங்கத்தவர்கள் மட்டுமே விளையாட்டு அணிகளுள் உள்வாங்கப்படுவர்.
- ஒழுங்காகப் பயிற்சிக்கு வரும் வீரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.
- அணியில் போதிய வீரர்கள் இல்லாத நேரங்களில் மட்டுமே வயதுகுறைந்த அணிகளில் இருந்து வீரர்கள் உள்வாங்கப்படுவர்.
- ஒரே பிரிவில் இரு அணிகள் தேர்வாக வேண்டி ஏற்படின் இரு அணிகளும் சமபலமுடையதாகவும் (U7 og U9 ), தர அடிப்படையிலும் (ஏனைய அணிகள்) தேர்வாகும். தமது அணிக்குகந்த முடிவை அணிப்பொறுப்பாளருடன் இணைந்து பயிற்றுநர் எடுப்பார்.

**வீரர்களைப் பயன்படுத்தல்**

- நிலைமைகளுக்குத் தக்கவாறு பதில் வீரர்கள் பிரதியீடு செய்யப்படுவர்.
- திறமை, ஒழுங்கு முதலானவற்றுக்கு முன்னுரிமையளிக்கப்படும் அதேநேரம் அணியின் சகல வீரர்களும் பயன்படுத்தப்படுவதும் உறுதி செய்யப்படும்.
- U7 og U9 ஆகிய அணிகளின் அனைத்து வீரர்களுக்கும் சம அளவிலான நேரம் பங்கீடு செய்யப்படும்.

**வீரர்கள் பங்களிப்பு**

- எமது கழகத்தின் சார்பாக அணிகள் பங்குபெறும் விளையாட்டுப் போட்டிகளில் எமது அங்கத்தவர்கள் எமது அணிகளிலேயே விளையாட வேண்டும்.
- எமது கழகத்தில் இல்லாத விளையாட்டுகளில் பங்குபெற விரும்பும் வீரர்கள் தாம் விரும்பும் கழகங்களில் இணைந்து விளையாடலாம்.